ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2327/33 - 2023 අප්‍රේල් මස 11 වැනි අඟහරුවාදා - 2023.04.11

*2327/33 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ.- 8/ 2007*(III)

**2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம்**

*2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின்கீழ், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்*

**கஞ்சன விஜேசேகர,**
*மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்.*

கொழும்பு,
*2023, மாச்சு 31.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள், 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, உபகரணங்களின் வலு செயல்திறன் நியமங்கள் (குளிரூட்டிகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. ஆளொருவர், இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை நியமங்கள் (SLS) 1690 இல் குறித்துரைக்கப்பட்ட வலு செயல்திறன் நியமங்களுக்கு இசைந்தொழுகாத இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் குளிரூட்டியை இலங்கையில் பொருத்துதலோ அல்லது உற்பத்தி செய்தலோ அல்லது இலங்கைக்கு இறக்குமதி செய்தலோ ஆகாது.

3. இலங்கை நியமங்கள் (SLS) 1690 இல் குறித்துரைகக்ப்பட்ட வலு செயல்திறன் நியமங்களுக்கு இசைந்தொழுகாத இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் குளிரூட்டியை இலங்கையில் பொருத்துகின்ற அல்லது உற்பத்தி செய்கின்ற அல்லது இலங்கைக்கு இறக்குமதி செய்கின்ற ஒவ்வோராளும், இதற்கான அட்டவணை II இல் மேலும் விபரமாக விபரிக்கப்படுகின்ற SLS 1690 இல் குறித்துரைக்கப்பட்டவாறான வடிவம், பரிமாணங்கள், பண்புக்கூறு அளவு மற்றும் நிறத்துடன், அத்தகைய குளிரூட்டியுடன் இணைக்கப்பட்ட குறைந்தபட்ச வலு செயல்திறன் (MEP) சுட்டுத்துண்டொன்றை வெளிக்காட்டி வைத்தல் வேண்டும்.

1A - G 39324 — 26 (2023/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் குளிரூட்டியின் எவரேனும் பொருத்துநர், உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளரினால் SLS 1690 இல் குறித்துரைக்கப்பட்ட வலு செயல்திறன் நியமங்களுடனான இசைந்தொழுகுகையை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காக, விடயத்துக்கேற்ப அத்தகைய பொருத்துநர், உற்பத்தியாளர் அல்லது இறக்குமதியாளர் SLS 1690 இல் குறித்துரைக்கப்பட்ட வலு செயல்திறன் நியமங்களுக்கு இசைந்தொழுக அத்தகைய குளிரூட்டியை பொருத்தியுள்ளார், உற்பத்தி செய்துள்ளார் அல்லது இறக்குமதி செய்துள்ளார் என சான்றுப்படுத்தி இலங்கை கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய சான்றிதழ் அதன்கண் அடங்கியுள்ள நிகழ்வுகளின் முதற்றோற்றளவிலான சான்றாகவிருத்தல் வேண்டும்.

5. உற்பத்திப் பொருளில் ஒட்டப்பட்டதும் மூன்றாம் ஒழுங்குவிதியினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளுடன் இசைந்தொழுகாத குறைந்தபட்ச வலு செயல்திறன் (MEP) சுட்டுத்துண்டொன்றுடன் இலங்கையில் பொருத்தப்பட்டதாக அல்லது உற்பத்தி செய்யப்பட்டதாக இருப்பினுஞ்சரி அல்லது இலங்கையினுள் இறக்குமதி செய்யப்பட்டதாக இருப்பினுஞ்சரி இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் குளிரூட்டியை ஆளொருவர் களஞ்சியப்படுத்தலோ, வெளிக்காட்டி வைத்தலோ, ஒன்றில் மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பனை செய்தலோ, விற்பனைக்காக முனைதலோ அல்லது விநியோகித்தலோ ஆகாது.

6. இவ்வொழுங்குவிதிகளில் -

"அதிகாரசபை" என்பது, 2007 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை எனப் பொருள்படும் ;

"இலங்கை கட்டளைகள் நிறுவனம்" என்பது, 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கை கட்டளைகள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை கட்டளைகள் நிறுவனம் எனப் பொருள்படும்.

**அட்டவணை I**

(2, 3, 4 மற்றும் 5 ஆம் ஒழுங்குவிதிகள்)

இவ்வொழுங்குவிதிகள் பின்வருவனவற்றிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும் :-

உறையவைக்கும் மற்றும் குளிரூட்டும் வசதிகளைக் கொண்டுள்ளனவும் இயற்கை வெப்பச் சுழற்சி அல்லது மேலதிக காற்றோட்டத்தினால் குளிராகின்றனவும் 230 V a.c, 50 HZ பெயரளவான மின்வலு வழங்கியின் மீதான வீட்டு மின்சார நீராவி அமுக்க வகையினவான குளிரூட்டிகள்.


இவ்வொழுங்குவிதிகள் பின்வரும் பொருட்களுக்கு ஏற்புடையனவாதலாகாது :-

(அ) மேசை மீது வைக்கக்கூடிய குளிரூட்டிகள் ;
(ஆ) வாகனங்கள் (உம் நடமாடும் வீடுகள், கரவான்கள் மற்றும்/ ரயில் கார்கள்) அல்லது படகுகளின் உள்ளே பயன்படுத்துவதற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட குளிரூட்டிகள் ;
(இ) தன்னியக்கமாக ஐஸ் கட்டியை அகற்றுதல், குளிர்ந்த நீரை அகற்றுதல் போன்ற மேலதிக சிறப்புக் கூறுகளுடனான குளிரூட்டிகள் ;
(ஈ) குளிரூட்டும் பணி துணைநிலையாகவுள்ள உற்பத்திப் பொருட்கள் (உ.ம் கொதிக்கும் அல்லது குளிராக்கும் நீர் விநியோகிப்பான்கள்) ; அத்துடன்
(உ) போத்தலில் அடைக்கப்பட்டவையை குளிரூட்டுபவைகள்.

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 3)

உரு 1 : குறைந்தபட்ச வலு செயல்திறன் (MEP) சுட்டுத்துண்டு




(அ) - லீற்றர்களில்/ வாற்றுக்களில் குறிப்பிட்ட குளிரூட்டப்பட்ட அளவு

(ஆ) - கிலோவாட்மணி/ மாதத்தில் தரப்பட்ட குளிரூட்டியின் மாதாந்த வலுப் பயன்பாடு

(இ) - (b) இனை 0.72 இனால் பிரிப்பதன் மூலம் கணக்கிடப்படுகின்ற வாற்றுக்களில் சராசரி அளவிடப்பட்ட மின்சக்தி

(ஈ) - $CO_2$ இற்கு சமமான ($CO_{2eq}$) கிலோகிராம்களில் தரப்பட்ட குளிரூட்டியின் பூகோள செப்பமயமாதல் சாத்திய அளவு


(உ) - $R11_{eq}$ இனால் தரப்படும் குளிரூட்டியின் ஓசோன் தேய்வு சாத்திய அளவு

(ஊ) - பயன்படுத்தப்பட்ட குளிரூட்டி


(எ) - குளிரூட்டி வகை

(ஏ) - குளிரூட்டியின் மாதிரி இலக்கம்

உரு. 2 - MEP சுட்டுத்துண்டின் உண்மையான அளவு




உரு. *3* - MEP சுட்டுத்துண்டின் பரிமாணங்கள்




சகல பரிமாணங்களும் மில்லி மீற்றர்களில்


உரு. *4* - MEP சுட்டுத்துண்டின் அச்சு வகை மற்றும் பண்புக்கூறு அளவுகள்



உரு. 3 - MEP சுட்டுத்துண்டின் பரிமாணங்கள்

உரு. 5 - MEP சுட்டுத்துண்டின் நிறங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| கருப்பு : | C: 0% | M: 0% | Y: 0% | K: 100% |
| கடும் பச்சை: | C: 59% | M: 24% | Y: 100% | K: 6% |
| இளம் பச்சை: | C: 35% | M: 0% | Y: 100% | K: 0% |
| வெள்ளை : | C: 0% | M: 0% | Y: 0% | K: 0% |




EOG - 04 - 0082